Ours bank with
Bank of Baroda

மதுரை மணி
Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)




மதுரை பதிப்பு | *மணி 54 | * ஓசை 42 | உள்ளூர் - 11.02.2026 | புதன் | விலை ரூ.3/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 54 | * Issue 42 | வெளியூர் - 12.02.2026 | வியாழன் | Price Rs. 3/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

**இந்த பொருட்கள் இருந்தால் லட்சுமி யின் அருள் நிச்சயம் ..!**

**இனி "வந்தே மாதரம் "கட்டாயம்**

**திமுக கூட்டணி பேச்சு: பிப்ரவரி 23-ல்**

**சபா நாயகர் நாற்காலியில் அமர மாட்டேன்: ஓம் பிர்லா**

## மத்திய மந்திரி அமித்ஷா 2 நாள் பயணமாக 13-ந்தேதி திருச்சி வருகை!



திருச்சி, பிப். 11–

மத்திய உள்துறை மந்திரி அமித்ஷா தமிழகம் மற்றும் காரைக்காலில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்காக இரண்டு நாள் சுற்றுப் பயணமாக நாளை மறுநாள் (வெள்ளிக்கிழமை) திருச்சி வருகை தர உள்ளார். டெல்லியில் இருந்து தனி விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தரும் அமித்ஷா அன்று இரவு திருச்சியில் உள்ள ஒரு நட்சத்திர விடுதியில் ஓய்வெடுக்கிறார்.

மறுநாள் பிப்ரவரி 14–ந்தேதி திருச்சி விமான நிலையத்திலிருந்து ஹெலிகாப்டர் மூலம் காரைக்கால் புறப்பட்டு செல்கிறார். காரைக்கால் வரிச்சிகுடி அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடில் தரையிறங்குகிறார். பின்னர் அங்கிருந்து கார் மூலம் புறப்பட்டு காரைக்கால் நகராட்சி திடலுக்கு காலை 11 மணிக்கு சென்றடைகிறார். அதன் பின்னர் அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பா.ஜ.க. பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகிறார்.

பொதுக்கூட்டம் முடிவடைந்த பின்னர் மீண்டும் ஹெலிகாப்டர் மூலம் திருச்சி விமான நிலையம் வரும் அவர், விமானத்தில் சேலம் புறப்பட்டு செல்கிறார். அங்கு நடைபெறும் பா.ஜ.க. மத்தியக்குழு கூட்டத்தில் பங்கேற்று உரையாற்றுகிறார்.

அமித்ஷா வருகையையொட்டி மத்திய மந்திரிகள் பியூஸ் கோயல் எல்.முருகன், தமிழக பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் திருச்சியில் முகாமிட உள்ளனர்.

மேலும் திருச்சி திருவானைக்காவல் ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரியில் பாரதம் அடுத்த தசாப்தம் என்ற பெயரில் தொழிலதிபர்கள் சந்திப்பு நிகழ்வு நடைபெறுகிறது. இதில் மத்திய மந்திரிகள் பியூஸ் கோயல், எல்.முருகன் மற்றும் நயினார் நாகேந்திரன் ஆகியோர் பங்கேற்க உள்ளனர். இந்த நிகழ்வில் தமிழகம் மட்டுமல்லாமல் நாடு முழுவதும் இருந்து பா.ஜ.க. சார்புடைய தொழிலதிபர்கள் மற்றும் பல்துறை வல்லுநர்கள் இதில் கலந்து கொள்கிறார்கள்.

அமித்ஷா இரண்டு நாட்கள் திருச்சியில் இருப்பதால் 13–ந்தேதி மாலை அல்லது 14–ந்தேதி தமிழக தேர்தல் நிலவரம் குறித்து பா.ஜ.க. நிர்வாகிகளுடன் முக்கிய ஆலோசனை கூட்டம் நடக்க வாய்ப்புள்ளதாகவும் பா.ஜ.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## ஆட்சியில் பங்கு தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது ; முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டம்!

சென்னை, பிப். 11–

சென்னையில் இந்தியா டுடே கருத்தரங்களில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் கலந்து கொண்டு பேசியதாவது:–

2021 சட்டமன்ற தேர்தலை விட இந்த தேர்தல் கடினமாக இருக்காது. நிறைய சாதனைகளை செய்திருக்கிறோம். அவற்றை மக்களிடம் எடுத்து சொல்லி வெற்றி பெறுவோம். வளர்ச்சி திட்டங்களை முன்வைத்து மக்களிடம் வாக்கு கேட்கிறோம். திமுக ஆட்சி அமைக்கும் என்பதில் சந்தேகமில்லை.

திமுக அரசு தொடர்ந்தால்தான் தமிழ்நாடு நன்றாக இருக்கும் என்று மக்கள் நம்புகிறார்கள்.

பல நன்மைகளைச் செய்துவரும் தமிழ்நாடு அரசுக்கு மத்திய அரசு பல நெருக்கடிகளைக் கொடுத்து, துரோகத்தையும் அநீதியையும் செய்து வருகிறது. தமிழக அரசின் தோழி விடுதி திட்டத்தை மத்திய அரசு பின்பற்றுகிறது. மத்திய அரசால் தமிழ்நாட்டின் வளர்ச்சியை மறைக்க முடியவில்லை. ஊழல் கூட்டணிக்கு பெயர் தான் டபுள் என்ஜின் கூட்டணி. மத்திய அரசு தமிழகத்துக்கு பட்ஜெட்டில் கொடுத்தது ஜீரோ, தேர்தலில் அவர்களுக்கு ஜீரோ தான்.

இந்தியா டுடே வெளியிட்ட கருத்து கணிப்பை உண்மையாக்குவோம். 3% வாக்கு வித்தியாசம் இருந்தாலே பெரும்பாலான இடங்களில் மாபெரும் வெற்றி கிடைக்கும். ஆனால்,




திமுகவுக்கும் அதிமுகவுக்கும் 12% வாக்கு வித்தியாசம் உள்ளது.

எத்தனை கூட்டணி தமிழகத்தில் அமைந்தாலும் திமுக கூட்டணிதான் தேர்தலில் வெல்லும். கூட்டணியில் குழப்பம் என திட்டமிட்டு பரப்பப்படுகிறது. திமுக காங்கிரஸ் இடையே குழப்பம் இல்லை. கூட்டணியில் குழப்பம் ஏற்படும் என மற்றவர்கள் நினைப்பது நடக்காது. திமுக, காங்கிரஸ் கூட்டணி இணக்கமாக இருக்கிறது. மற்றவர்கள் நினைப்பது நடக்காது. ஆட்சியில் பங்கு தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது. திமுக, காங்கிரஸ் கூட்டணி தொடரும்.

கூட்டணியில் முறிவு ஏற்படுவதற்காக ஆட்சியில் பங்கு என்பதை சிலர் கிளப்பி விடுகின்றனர். அது எடுபடாது. ஆட்சியில் பங்கு தமிழ்நாட்டுக்கு ஒத்துவராது என்பது காங்கிரசிஸ்கு நன்றாக தெரியும். அரசியலை தாண்டி ராகுல் காந்தியை ஒரு சகோதரராக பார்க்கிறேன். அவரும் அப்படித்தான்.

திமுக கூட்டணியில் காங்கிரஸ் தொடர்ந்து இருக்கும். கலைஞர் ஒரு பழமொழி சொல்லி இருக்கிறார். உரிமைக்கு குரல் கொடுப்போம் உறவுக்கு கைகொடுப்போம். ஆட்சியில் பங்கு என்ற கோரிக்கையை காங்கிரஸ் முன்வைக்கும் நிலையில் முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் இவ்வாறு அவர் கூறினார். அரசியலில் சுறுசுறுப்பாக இருக்க என்ன காரணம் என கேள்வி எழுப்பியதற்கு, அரசியலில் களம் புகுந்ததில் இருந்து தொடர்ந்து உழைத்து வருகிறேன். தினமும் உடற்பயிற்சி செய்கிறேன். கலைஞர் கருணாநிதியிடம் நான் கற்றுக்கொண்டது உழைப்பு அதையேதான் உதயநிதிக்கும் சொல்கிறேன் என்றார்.




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையில், INDIA TODAY சார்பில் நடைபெற்ற TAMIL NADU ROUND TABLE நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, உரையாற்றினார்.

## 30,000 டன் தங்க புதையல்...!!

# அதுவும் இந்தியாவில்!! ஆடிப்போன உலக நாடுகள்..!

### மொத்த ஜிடிபி-ஐ விட இந்திய குடும்பங்களில் அதிக இருப்பு!!






புதுடெல்லி,பிப். 11–

இன்றைக்கும் உலகம் முழுவதுமே யார் வசம் அதிக தங்கம் இருக்கிறது என்ற போட்டி தான் நடக்கிறது. எந்த நாட்டிடம் அதிக தங்கம் உள்ளதோ உலக அரசியலில் அவற்றின் கை ஓங்கி இருக்கும். இதனால் தான் சீனா உள்பட பல நாடுகளும் போட்டி போட்டு கொண்டு தங்கம் வாங்குகின்றன. உலக நாடுகளின் வங்கிகள் போட்டி போட்டு தங்கம் வாங்கினாலும் இந்தியர்களை மிஞ்ச முடியவில்லை என்பது தான் உண்மை.

இந்தியர்கள் பாரம்பரியமாகவே தங்கத்தை வாங்கி சேமித்து வைக்கக்கூடிய பழக்கம் கொண்டவர்கள். என்னதான் பங்குச்சந்தை, மியூச்சுவல் ஃபண்டுகள், சேமிப்பு திட்டங்கள் என இருந்தாலும் ஒரு சராசரி இந்திய குடும்பத்திடம் சென்று உங்களிடம் ஒரு கணிசமான தொகை சேர்ந்தால் என்ன வாங்குவீர்கள் எனக் கேட்டால் உடனடியாக அவர்கள் தங்கத்தை தான் வாங்குவேன் என கூறுவார்கள். அந்த அளவிற்கு இந்தியர்களுக்கும் தங்கத்துக்கும் இடையேயான பிணைப்பை நம்மால் பிரித்து விடவே முடியாது. நாம் சம்பாதித்து வாங்கக்கூடிய தங்கம் மட்டுமில்லாமல் பரம்பரை பரம்பரையாக கைமாறக்கூடிய தங்க நகைகள் என இந்திய குடும்பங்கள் வசம் கிட்டத்தட்ட 30,000 டன்கள் தங்கம் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

இந்தியாவின் ரிசர்வ் வங்கி வசமே சுமார் 800 டன்கள் தங்கம் தான் இருக்கிறது என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். அமெரிக்கா, சீனா என உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் மத்திய வங்கிகள் வசம் இருக்கும் தங்கத்தை விட இந்திய குடும்பங்கள் வசம் பெரிய தங்க புதையலே இருக்கிறது. இந்த நிலையில் அண்மையில் வெளியாக இருக்க கூடிய ஒரு தகவல் இன்னும் நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது. அதாவது இந்தியாவின் மொத்த ஜிடிபி–ஐ விட இந்திய குடும்பங்கள் வசம் இருக்கும் தங்கத்தின் மதிப்பு அதிகமாம்.

2025– 2026 நிதியாண்டுக்கான இந்தியாவின் நாமினால் ஜிடிபி மதிப்பு 4.125 டிரில்லியன் டாலர்கள் ஆனால் இந்திய குடும்பங்கள் வசம் இருக்கக்கூடிய தங்கத்தின் மதிப்பு 5 டிரில்லியன் டாலர்கள். அதாவது இந்தியாவின் ஒரு ஆண்டுக்கான மொத்த உள்நாட்டு உற்பத்தியை விட இந்திய குடும்பங்கள் வசம் இருக்கும் தங்கத்தின் மதிப்பு அதிகம் என்பதை தான் இது காட்டுகிறது. 2025 ஆம் ஆண்டில் ஆண்டிலும், கடந்த மாதமும் தங்கத்தின் விலை பல மடங்கு உயர்ந்தது தான் இந்திய குடும்பங்களிடம் இருக்கும் தங்கத்தின் மதிப்பு உயர்வதற்கு முக்கிய காரணம். இந்திய குடும்பங்கள் தங்கத்தை பாதுகாப்பான ஒரு முதலீடாக தான் பார்த்து வருகிறார். ஒரு அவசர பண தேவைக்கு உடனே கை கொடுக்கும் என்பதும் ஒரு காரணம். இதனால் எவ்வளவு தான் தங்கம் விலை உயர்ந்தாலும் இந்தியர்கள் தங்கம் வாங்குவதை நிறுத்துவதில்லை. அது பெரும்பாலும் வீடுகளுக்குள்ளேதான் முடங்கிக் கிடக்கிறது என்பதுதான் பல்வேறு நிபுணர்கள் முன்வைக்க கூடிய வாதம். வீட்டிலோ அல்லது வங்கி லாக்கரிலோ கிடக்கிறது.

இந்தியா நிறுவனத்தின் இந்திய குடும்பங்கள் வசம் மிகப்பெரிய அளவு தங்கம் இருக்கிறது, அது நாம் பெருமை கொள்ள வேண்டிய விஷயம் ஆனால் இது நம்முடைய பொருளாதாரத்திற்கு பயன்படுகிறதா என்றால் இல்ல. அந்த குடும்பங்கள் ஒரு அவசர பணத்தை என்றால் அதனை வைத்து கடன் பெறுகிறார்கள் ஆனால் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இது உதவுவது கிடையாது என்பதே உண்மை.

## ஷேக் ஹசீனா ஆட்சி கவிழ்ப்புக்கு பிறகு வங்காளதேசத்தில் பொதுத்தேர்தல்!



வங்கதேசம், பிப். 11–

வங்காள தேசத்தில் கடந்த 2024–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் மாணவர்களின் தீவிர போராட்டத்தால் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா நாட்டைவிட்டு வெளியேறி இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளார். அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டதையடுத்து வங்காள தேசத்தில் முகமது யூனுஸ் தலைமையில் இடைக்கால அரசு அமைக்கப்பட்டது.

இதற்கிடையே வங்காளதேசத்தில் பிப்ரவரி 12–ந்தேதி பொதுத்தேர்தல் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி வங்காள தேசத்தில் நாளை பொதுத்தேர்தல் நடைபெற உள்ளது.

மேலும், அரசின் நிர்வாக அதிகாரங்களைக் கட்டுப்படுத்தும் 'ஜூலை சாசனம்' என்ற சீர்திருத்தத் தொகுப்பு குறித்த பொது வாக்கெடுப்பும் நடக்கிறது.

350 இடங்களை கொண்ட வங்காளதேச பாராளுமன்றத்தில் 300 இடங்களுக்கு நாளை வாக்குப்பதிவு நடக்கிறது. 50 இடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கப்பட்ட இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களால் விகிதாசார முறையில் தேர்வு செய்யப்படும்.

தேர்தலில் பாராளுமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வெள்ளை நிற வாக்குச்சீட்டும், சீர்திருத்தங்கள் குறித்த வாக்கெடுப்பிற்கு இளஞ்சிவப்பு நிற வாக்குச்சீட்டும் பயன்படுத்தப்பட உள்ளன.

இத்தேர்தலில் தாரிக் ரகுமானின் வங்காளதேச தேசியவாத கட்சி தலைமையில் 10 கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன. ஜமாத்–இ–இஸ்லாமி கட்சி தலைமையில் 11 கட்சிகள் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. அதேபோல் இஸ்லாமிய அந்தோலன் வங்காளதேசம் கட்சி, ஜாதியா கட்சி உள்ளிட்ட கட்சிகளும் களத்தில் உள்ளன. ஷேக் ஹசீனாவின் அவாமி லீக் கட்சிக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் அக்கட்சி தேர்தலில் போட்டியிட முடியவில்லை.


தேர்தலில் 1,981 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். இதில் 1,518 பேர் முதல் முறையாக போட்டியிடுகிறார்கள். 12.77 கோடி வாக்காளர்கள் உள்ளனர். நாளை காலை தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 4 மணிக்கு முடிவடையும். அதன்பின் வாக்கு எண்ணிக்கை தொடங்கும்.

தேர்தலுக்காக நாடு முழுவதும் சுமார் 43 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 24 ஆயிரம் வாக்குச்சாவடிகள் பதற்றமானவை என்று கண்டறியப்பட்டுள்ளது. அங்கு கூடுதல் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. பெரும்பாலான வாக்குச்சாவடிகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது.

வங்காளதேசத்தில் கடந்த டிசம்பர் மாதம் மாணவர் இயக்க தலைவர் சுட்டு கொல்லப்பட்டதையடுத்து இந்துக்கள் மீதான தாக்குதல் அதிகரித்தது. இதனால் வங்காள தேசத்தில் பரபரப்பான சூழல் நிலவி வரும் நிலையில் பொதுத் தேர்தல் நடத்தப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

தலையங்கம்
மதுரை மணி
புதன்கிழமை 11.02.2026
விசுவாவசு தமிழ் வருடம்
தை மாதம் 28-ம் தேதி

# தங்கம், வெள்ளி வர்த்தகத்தின் வெளிவராத கருப்பு பக்கம்!



தங்கம் மற்றும் வெள்ளி விலை தான் கடந்த ஓராண்டு காலமாகவே பேசு பொருளாக இருக்கிறது. ஏனெனில் இந்த இரண்டு உலோகங்களுமே உலக அளவில் சரி உள்ளூர் சந்தையிலும் சரி மிக வேகமாக விலை உயர்ந்தன. தங்கத்தை காட்டிலும் வெள்ளியின் விலை புது பணக்காரனை போல ஒவ்வொரு நாளும் கிலோவுக்கு 20 முதல் 30000 ரூபாய் என்றெல்லாம் உயர்வு கண்டது. சாதாரண மக்களுக்கு தங்கம் , வெள்ளி விலை உயர்வு என்றால் இன்று விலை நிலவரத்தை பார்ப்போம், என்ன இவ்வளவு விலை உயர்ந்து விட்டதே என புலம்பி கொண்டே சென்று விடுவோம். ஆனால் இதனையே வர்த்தகமாக கொண்டிருப்பவர்களின் நிலை தான் தற்போது பரிதாபமாக உள்ளது.

குஜராத் மாநிலம் ராஜ்கோட்டின் பேடக் சாலை இந்தியாவின் வெள்ளி சாலை. நாடு முழுவதும் உள்ள நகை விற்பனையாளர்கள் இங்கு தான் கட்டி கட்டியாக வெள்ளியை வாங்கி செல்கிறார்கள். மொத்த விலையில் வெள்ளியை கட்டிகளாக விற்பனை செய்பவர்களும் அதனை சார்ந்த தொழிலாளர்கள் எண்ணிக்கையும் அதிகம். ஆனால் இங்கே தற்போது தொழிலே தத்தளித்து கொண்டிருக்கிறது. தங்கம், வெள்ளிக்கான தேவையை முன்பை போல இல்லை குறிப்பாக ஒவ்வொரு மாதமும் 25 லிருந்து 30 டன்கள் வரை வெள்ளியை வாங்கி விற்பனை செய்து வந்த வணிகர்கள் பலரும் தற்போது மாதத்திற்கு ஒரு டன் கூட விற்பனை செய்ய முடியாமல் தவிக்கின்றனர்.

வெள்ளி விலை திடீரென உயர்ந்ததும், சரிந்ததும் இதற்கு காரணம். இதனால் ஏற்பட்ட நஷ்டத்தால் பல வணிகர்களும் தங்களுடைய கடைகளை இழுத்து மூடிவிட்டனர்.சிலர் ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் தான் கடையே திறந்து வைக்கிறார்கள். அதுவும் நஷ்டம் ஏற்படுகிறது என்பதால் பல ஊழியர்களை வேலையில் இருந்து கூட நீக்கி விட்டார்கள். இங்கே வெள்ளி மொத்த விற்பனை வணிகத்தில் ஈடுபட்டு இருக்க கூடிய பல வியாபாரிகளும் ஒப்பந்த முறையில் இருந்து ஊழியர்கள் அனைவரையும் வேலைகளில் நீக்கி விட்டார்கள் என்கிறார் கிட்டத்தட்ட 1.5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு பறி போய் இருக்கிறது.

ஆசியாவின் மிகப்பெரிய வெள்ளி சந்தை தான் ராஜ்கோட்டின் இந்த சந்தை. இங்கே வெள்ளி கட்டிகள் டன் கணக்கில் கிடைக்கும், நாடு முழுவதும் இருக்கக்கூடிய நகை விற்பனையாளர்கள் இங்கிருந்துதான் வெள்ளி வாங்கிகொண்டு சென்று அதனை நகைகளாகவும் நாணயங்களாகவும் பொருட்களாகவும் மாற்றி விற்பனை செய்கிறார்கள். மொத்த விற்பனையாளர்கள் நகை கட்டிகளை அனுப்பி விடுவார்கள் உரிய நபரை சென்ற பின் தான் முழு பணமும் கைக்கு வருமாம். நம்பிக்கை அடிப்படையில் தான் இவை அனைத்துமே நடக்கும். ஆனால் வெள்ளி அனுப்பும் போது ஒரு விலை, பெறும் போது ஒரு விலை, தங்கள் கைகளுக்கு பணம் வரும் போது ஒரு விலை என இருப்பதால் 44 நிறுவனங்கள் திவால் நிலைக்கு சென்றுவிட்டன, 3500 கோடி ரூபாய் நஷ்டமடைந்துவிட்டன என அறியப்படுகிறது,

சிறிய அளவு விலை ஏற்ற இறக்கம் என்பதில் பிரச்சனை இல்லை ,ஒரே நாளில் வெள்ளியின் விலை 30 ஆயிரம் ரூபாய் அதிகரிக்கிறது பின்னர் சரிகிறது இதில் எப்படி தொழில் புரிய முடியும் முதலில் ஒரு டன் வெள்ளி 10 கோடி ரூபாய்க்கு கிடைத்தது பின்னர் அதன் விலை 36 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது பின்னர் 26 கோடி ரூபாயாக சரிந்தது. ஒவ்வொரு நாளும் இப்படி விலை ஏறி இறங்குவதை வைத்துக்கொண்டு தொழில் செய்ய முடியவில்லை. மும்பை ஜாவேரி பஜார் இந்தியாவின் பெரிய தங்க சந்தை. இங்கேயும் இதே நிலைமைதான் வாடிக்கையாளர்கள் வருவது குறைந்துவிட்டது என மொத்த வியாபாரிகள் புலம்புகின்றனர். பலரும் வருகை தருகிறார்கள் பார்க்கிறார்கள், விலை கேட்கிறார்கள் ஆனால் வாங்காமலே யே சென்று விடுகிறார்கள் என்கின்றனர். திருமண நிகழ்வுகளுக்காக நகை வாங்க வருவோர் கூட கூட குறைந்த எடை கொண்ட தங்கத்தை தான் வாங்குகிறார்கள். முதலில் தங்கம் வாங்க முடியாதவர்கள் வெள்ளியாவது வாங்குவார்கள், தற்போது வெள்ளியும் விலை உயர்ந்து விட்டதால் அதையும் வாங்காமல் செல்வதாக அங்கே கடை நடத்தி வரக்கூடிய வியாபாரிகள் கூறுகிறார்கள். தங்கம் மற்றும் வெள்ளி நகை வர்த்தகமே பெரிய சவாலான சூழலில் இருக்கிறது என்கிறார். காலை ஒரு விலை, மாலை ஒரு விலை என ஒவ்வொரு நாளும் ஒரு திசையில் இருப்பதால் வியாபாரிகள் என்ன செய்வது என தெரியாமல் திகைத்து நிற்கின்றனர். இது யாரும் அறியாத கருப்பு பக்கமாக உள்ளது.

# ஒட்டன்சத்திரம் பகுதியில் பிப். 12-ல் மின்சாரம் நிறுத்தம்!



ஒட்டன்சத்திரம், பிப். 11–

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் துணை மின் நிலையத்தில் அக்டோபர் (12.2.2026) வியாழன்கிழமை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால் ஒட்டன்சத்திரம்,புது அத்திக்கோம்பை, விருப்பாச்சி, காவேரியம்மாபட்டி, தங்கச்சியம்மாபட்டி, புலியூர்நத்தம், லெக்கையன்கோட்டை, காளாஞ்சிபட்டி, அரசப்பிள்ளைபட்டி, காப்பிளியபட்டி, அம்பிளிக்கை,வடகாடு மலை கிராமங்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் காலை 9 மணி முதல் மாலை 3 மணி வரை மின்விநியோகம் இருக்காது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# EPFO ஊதிய உச்சவரம்பு, EPS ஓய்வூதியம், ESIC வரம்பு... 3 குட் நியூஸ்: அமைச்சர் அதிரடி அப்டேட்!

டெல்லி, பிப். 11–

இபிஎஃப் உறுப்பினர்களுக்கு ஒரு முக்கியமான அப்டேட் கிடைத்துள்ளது. EPFO மற்றும் ESIC ஊதிய உச்சவரம்புகளை உயர்த்துவது, தேசிய அடிப்படை ஊதியத்தை நிர்ணயிப்பது மற்றும் EPS 1995 இன் கீழ் குறைந்தபட்ச ஓய்வூதியத்தை அதிகரிப்பது குறித்து அரசாங்கம் முடிவெடுக்கத் தயாராகி வருவதாக மத்திய தொழிலாளர் அமைச்சர் மன்சுக் மண்டவியா தெரிவித்துள்ளார். ஒடிசாவின் பூரியில் நடந்த தொழிலாளர் மாநாட்டில் பேசிய அவர், இந்த பிரச்சினைகள் மத்திய அரசுடன் சமீபத்தில் நடந்த கூட்டங்களில் விவாதிக்கப்பட்டதாகவும், தொழிலாளர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு விரைவில் இவை குறித்து மதிப்பாய்வு செய்யப்படும் என்றும் கூறினார்.



**இபிஎஃப் ஊதிய உச்சவரம்பு அதிகரிக்குமா?**

EPFO மற்றும் ESIC கவரேஜுக்கான ஊதிய உச்சவரம்பை அதிகரிக்கும் திட்டத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்து வருகிறது. இது கூடுதல் தொழிலாளர்களை இந்தியாவின் சமூகப் பாதுகாப்பு கட்டமைப்பின் கீழ் லட்சக்கணக்கான கொண்டுவரக்கூடும். தொழி லாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் தற்போது இந்த திட்டத்தை ஆராய்ந்து வருகிறது. எனினும், இன்னும் இறுதி முடிவு எதுவும் அறிவிக்கப்படவில்லை. குறைந்தபட்ச மாத ஓய்வூதிய திருத்தம் மற்றும் தேசிய அடிப்படை ஊதிய மாற்றங்களையும் உள்ளடக்கிய பரந்த தொழிலாளர்–கொள்கை சீர்திருத்தங்களின் ஒரு பகுதியாக இந்த விவாதம் உள்ளது.

**தற்போதைய EPFO மற்றும் ESIC சம்பள வரம்புகள் என்ன?**

– தற்போது, EPFO ஊதிய உச்சவரம்பு மாதத்திற்கு ரூ.15,000 ஆகும். இது தகுதியான ஊழியர்களுக்கான கட்டாய வருங்கால வைப்பு நிதி பங்களிப்புகளை தீர்மானிக்கிறது. இந்த வரம்பு கடைசியாக 2014 இல் திருத்தப்பட்டது.

– தற்போது ESIC ஊதிய உச்சவரம்பு மாதத்திற்கு ரூ.21,000 ஆக உள்ளது. இது திட்டத்தின் கீழ் சுகாதார காப்பீட்டுத் திட்டத்திற்கான தகுதியை வரையறுக்கிறது.

– இந்த வரம்புகள் பல ஆண்டுகளாக மாறாமல் இருப்பதால், சற்று அதிக சம்பளம் வாங்கும் பல தொழிலாளர்கள் தற்போது கட்டாய சமூகப் பாதுகாப்பு சலுகைகளிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர்.

**முன்மொழியப்பட்ட EPFO ஊதிய உச்சவரம்பு அதிகரிப்பு என்ன?**

இபிஎஃப் ஊதிய உச்சவரம்பை ரூ.15,000 –இலிருந்து ரூ.25,000 ரூ.30,000 –க்கு இடையில் மாற்ற கோரிக்கைகள் உள்ளன. எனினும், அரசாங்கம் EPFO ஊதிய உச்சவரம்பை மாதத்திற்கு ரூ.25,000 ஆக உயர்த்த பரிசீலித்து வருவதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இந்த பரிசீலனை செயல்படுத்தப்பட்டால், இந்த மாற்றம் அதிக சம்பளம் பெறும் ஊழியர்களுக்கு, குறிப்பாக தனியார் துறை மற்றும் நடுத்தர வருமான பிரிவுகளில் உள்ள ஊழியர்களுக்கு வருங்கால வைப்பு நிதி காப்பீட்டை விரிவுபடுத்தக்கூடும்.

**ESIC காப்பீட்டில் சாத்தியமான மாற்றங்கள்**

EPFO சீர்திருத்தங்களுடன், அரசாங்கம் ESIC சம்பள வரம்பிலும் அதிகரிப்பை மதிப்பீடு செய்து வருகிறது. இந்த வரம்பு தற்போது ரூ.21,000 ஆக உள்ளது. ESIC உச்சவரம்பை அதிகரிப்பது, இந்தத் திட்டத்தின் கீழ் அதிகமான தொழிலாளர்கள் மருத்துவக் காப்பீட்டு சலுகைகளைப் பெற அனுமதிக்கும். இது இந்தியாவின் சமூகப் பாதுகாப்பு காப்பீட்டை வலுப்படுத்தும்.

அரசாங்கம் திருத்தத்தை பரிசீலிக்க காரணம் என்ன?

பணவீக்கம், ஊதிய உயர்வு மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட பணியாளர்களின் விரிவாக்கம் இருந்தபோதிலும், EPFO ஊதிய உச்சவரம்பு ஒரு தசாப்தத்திற்கும் மேலாக மாறாமல் உள்ளது.

இபிஎஃப் ஊதிய உச்சவரம்பு அதிகரித்தால்:

– சமூகப் பாதுகாப்பு கவரேஜ் விரிவடையும்.

– PF பங்களிப்புகள் மூலம் ஓய்வூதிய சேமிப்பு அதிகரிக்கும்.

– காலப்போக்கில் ஓய்வூதிய நிதியும் வலுப்பெறும்.

அத்தகைய திருத்தம் தனியார் துறை ஊழியர்களுக்கான நிதிப் பாதுகாப்பை கணிசமாக மேம்படுத்தும் என்று நிபுணர்கள் கூறுகின்றனர்.

EPS Pension Hike: குறைந்தபட்ச மாத இபிஎஸ் ஓய்வூதியம் அதிகரிக்குமா?

தற்போது இபிஎஸ் ஓய்வூதியதாரர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.1,000 கிடைக்கிறது. இன்றைய வாழ்க்கைச் செலவுகளை ஒப்பிடும் போது இது மிக குறைவான ஒரு தொகையாகும். மேலும், பத்து ஆண்டுகளுக்கும் மேலாக இது மாறாமல் அப்படியே உள்ளது. இபிஎஸ் ஓய்வூயத்தை அதிகரிக்க பல தரப்புகளிலிருந்து கோரிக்கைகள் வந்த வண்ணம் உள்ளன. ரூ.3,000 முதல் ரூ.7,500 வரையிலான பரந்த வரம்பில் இதை அதிகரிப்பதற்கான கோரிக்கைகள் உள்ளன. இது குறித்தும் மத்திய அரசு முக்கிய முடிவை எடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

**உச்ச நீதிமன்றம் மற்றும் கொள்கை அழுத்தம்**

2026 ஆம் ஆண்டின் தொடக்கத்தில், சில மாதங்களுக்குள் EPF ஊதிய உச்சவரம்பை மறுபரிசீலனை செய்யுமாறு உச்ச நீதிமன்றம் அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டது. இது கொள்கை விவாதத்தை துரிதப்படுத்தியது. தற்போதுள்ள வரம்புகள் தற்போதைய ஊதிய நிலைகளைப் பிரதிபலிக்கவில்லை என்று வாதிட்டு, EPF, ESIC மற்றும் ஓய்வூதிய வரம்புகளை திருத்துமாறு தொழிலாளர் சங்கங்களும் கோரியுள்ளன.

**ஊதிய உச்சவரம்பு அதிகரிக்கப்பட்டால்:**

– கூடுதல் ஊழியர்கள் கட்டாய PF பங்களிப்புகளின் கீழ் வருவார்கள்.


– நிறுவன பங்களிப்புகள் அதிகரிக்கலாம்.

– ஓய்வூதிய சேமிப்பு அதிகரிக்கலாம்.

– சில தொழிலாளர்களுக்கு கையில் கிடைக்கும் சம்பளம் குறையலாம், ஆனால் நீண்ட கால சேமிப்பு அதிகமாக இருக்கலாம்.

இருப்பினும், அரசாங்கம் அதிகாரப்பூர்வ முடிவை அறிவிக்கும் வரை, EPFO ஊதிய உச்சவரம்பு ரூ.15,000 ஆகவும், ESIC ரூ.21,000 ஆகவும் தொடரும் என்பதை நினைவில் கொள்வது நல்லது.

# இந்த பொருட்கள் வீட்டில் இருந்தால், லட்சுமி தேவியின் அருள் நிச்சயம் கிடைக்கும்..!





இந்து மதத்தில் வாஸ்து சாஸ்திரத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. வாஸ்து சாஸ்திரம் என்பது வீடு கட்டுவது எப்படி என்று சொல்லும் ஒரு அறிவியல் மட்டுமல்ல. இது நமது வீடுகளில் அமைதி, மகிழ்ச்சி, ஆரோக்கியம் மற்றும் நிதி நிலைத்தன்மைக்கு வழிகாட்டும் ஒரு பழங்கால அறிவியலாகும். பல நேரங்களில், நாம் எவ்வளவு கடினமாக உழைத்தாலும், பணம் போதுமானதாக இருப்பதில்லை, செலவுகள் அதிகரித்து, எதற்காவது ஒரு பற்றாக்குறை இருந்துகொண்டே இருக்கிறது. மேலும், வீட்டில் கணவன் மனைவிக்கிடையே காரணமின்றி சண்டைகள், சகிப்பின்மை மற்றும் கருத்து வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

இதுபோன்ற சூழ்நிலைகளில், எல்லா முயற்சிகளுக்குப் பிறகும் வீட்டில் அமைதி நிலவவில்லை என்றால், அதற்கு எதிர்மறை ஆற்றலே காரணமாக இருக்கலாம் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. அந்த எதிர்மறை ஆற்றலை நீக்கி, நேர்மறை ஆற்றலை அதிகரிக்க வாஸ்து சாஸ்திரம் சில எளிய தீர்வுகளைப் பரிந்துரைத்துள்ளது. இவற்றைப் பின்பற்றினால், வீட்டில் அமைதி, மகிழ்ச்சி மற்றும் செல்வம் படிப்படியாக அதிகரிக்கும் என்று நம்பப்படுகிறது. இப்போது அத்தகைய முக்கியமான வாஸ்து பரிகாரங்களைப் பற்றி அறிந்துகொள்வோம்.

**துளசிச் செடி**

துளசிச் செடி விஷ்ணு பகவானுக்கும் லட்சுமி தேவிக்கும் மிகவும் உகந்ததாகக் கருதப்படுகிறது. வாஸ்து சாஸ்திரத்தின்படி, துளசிச் செடி இருக்கும் வீட்டில் பணத்திற்கு ஒருபோதும் பற்றாக்குறை ஏற்படாது என்று கூறப்படுகிறது. வீட்டின் முற்றத்திலோ அல்லது பால்கனியிலோ துளசிச் செடியை வளர்ப்பது நேர்மறை ஆற்றலை அதிகரித்து, நிதிச் சிக்கல்களைக் குறைக்கும் என்று நம்பப்படுகிறது.

**சங்கு**

வாஸ்து சாஸ்திரத்தில் சங்கிற்கு ஒரு சிறப்பு இடம் உண்டு. சங்கு இருக்கும் வீடு அனைத்து வகையான எதிர்மறை ஆற்றல்களிலிருந்தும் பாதுகாக்கப்படும் என்று வாஸ்து கூறுகிறது. அதனால்தான், சங்கை கோயில் அல்லது பூஜை அறையில் வைப்பது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது. தினமும் சங்கு ஊதுவது வீட்டில் தூய்மையையும் நேர்மறை ஆற்றலையும் அதிகரிக்கும்.

**ஸ்வஸ்திக் சின்னம்**

வாஸ்து சாஸ்திரம் ஸ்வஸ்திக் சின்னத்தை ஒரு மிகவும் மங்களகரமான சின்னமாக கருதுகிறது. இது லட்சுமி தேவியின் ஆசீர்வாதங்களைக் குறிக்கிறது. அதனால்தான், வீட்டின் பிரதான வாசலிலோ அல்லது பூஜை அறையிலோ ஸ்வஸ்திக் சின்னத்தை வைக்குமாறு வாஸ்து சாஸ்திரம் பரிந்துரைக்கிறது. இது செல்வம், மங்களம் மற்றும் அமைதியை ஈர்க்கிறது.

**நீர் நிரம்பிய கலசம்**

வீட்டிற்குள் எதிர்மறை ஆற்றல் நுழைவதைத் தடுக்க, நீர் நிரம்பிய கலசத்தை வைப்பது நல்லது என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகிறது. குறிப்பாக பூஜை அறையிலோ அல்லது வீட்டின் சுத்தமான பகுதியிலோ வைத்தால், நேர்மறை ஆற்றல் வீட்டில் நிலைத்திருக்கும் என்று நம்பப்படுகிறது.

**மணி**

வாஸ்து சாஸ்திரத்தின்படி, பூஜை அறையில் செம்பு அல்லது பித்தளையால் செய்யப்பட்ட ஒரு மணிவாவது இருக்க வேண்டும். மணி ஓசை எதிர்மறை ஆற்றலை நீக்கி, நேர்மறை ஆற்றலை ஈர்க்கிறது. அதனால்தான், தினசரி பூஜையின்போது மணி அடிப்பது மிகவும் மங்களகரமானதாகக் கருதப்படுகிறது.

# டிவிஎஸ் எலக்ட்ரானிக்ஸ் 'மேட் இன் இந்தியா' தீர்வுகள் மூலம் BFSI துறையில் பாதுகாப்பான வங்கி செயல்பாடுகளை வலுப்படுத்துகிறது

சென்னை, பிப். 11–

BFSI துறைக்கு வடிவமைக்கப்பட்ட 'மேக் இன் இந்தியா' ஹார்டுவேர் தீர்வுகள் மூலம் டிவிஎஸ் எலக்ட்ரானிக்ஸ் (TVSE) பாதுகாப்பான மற்றும் திறமையான வங்கி செயல்பாடுகளை உறுதிப்படுத்துகிறது. உயிர்வேர் அடையாளம் உறுதிப்படுத்தல், பாதுகாப்பான ஆவண அச்சிடுதல், பண மேலாண்மை உபகரணங்கள், POS மற்றும் சுயசேவை கியோஸ்குகள் போன்ற தீர்வுகள் வங்கிகளின் தினசரி செயல்பாடுகள் எளிமைப்படுத்தி, வாடிக்கையாளர்களுக்கு பாதுகாப்பான சேவை அனுபவத்தை வழங்க உதவுகின்றன. இதுகுறித்து TVS Electronics நிறுவனத்தின் Products & Solutions Group இன் Vice President Chief Business Officer திரு. சி. பாலாஜி கூறியதாவது: "இன்றைய வங்கி அமைப்புகள் பாதுகாப்பான, திடமான மற்றும் எப்போதும் செயல்பாட்டில் இருக்கும் தொழில்நுட்பங்களை தேடுகின்றன. TVSE தீர்வுகள் BFSI செயல்பாடுகளின் ஒவ்வொரு அடுக்கை பலப்படுத்துகின்றன."




மேலும், RBI முன்முயற்சிகள் கீழ் கிராமப்புறங்களில் பணிபுரியும் Business Cor–respondents க்காக TVSE வழங்கும் All–in–One டேப்லெட்டுகள் மற்றும் 19,000+ பின்கோடுகள் உள்ளடக்கும் சேவை வலையமைப்பு, குறைந்த உள்கட்டமைப்பு உள்ள பகுதிகளில் நம்பகமான வங்கி சேவைகளை வழங்க உதவுகிறது. TVSE Aikya போன்ற IT மேலாண்மை தீர்வுகள் வங்கிகளுக்கு குறைந்த டவுன்டைம் மற்றும் மேம்பட்ட செயல்திறனை வழங்குகின்றன.

# சின்மயி, ஏ.ஆர்.அமீன், ஏ.டி.கே, நகுல் அபியங்கர் இணையும் இசை விருந்தால் மேடை களைகட்டுகிறது!

சென்னை, பிப். 11–

சென்னையின் ஜவஹர்லால் நேரு வெளிப்புற மைதானத்தில் ஏ.ஆர். ரஹ்மான் மேடையேறும் 'தி வொண்டர்மென்ட் டூர்' நிகழ்ச்சியை நொய்ஸ் அண்ட் கிரெயின்ஸ், ஜோ என்டர்டெயின்மென்ட் மற்றும் ஃபேர்கேம் என்டர்டெயின்மென்ட் இணைந்து பிரம்மாண்டமாக நடத்துகின்றன. நீண்ட இடைவெளிக்குப் பிறகு சொந்த ஊரான சென்னையில் ரஹ்மான் நேரலையாக இசை விருந்தளிப்பது ரசிகர்களில் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



இந்த இசை இரவுக்கு சின்மயி ஸ்ரீபாதா, ஏ.ஆர். அமீன், நிசா ஷெட்டி, நிதேஷ் அஹெர், அம்ருதா சுரேஷ், நகுல் அபியங்கர், ஆதித்யா ஆர்.கே, ரக்ஷிதா சுரேஷ் மற்றும் பாடகர் ஸ்ரீநிவாசா ஆகிய முன்னணி கலைஞர்கள் இணைகிறார்கள். செவ்வியல், நவீனம், இன்டிபெண்டண்ட் இசை மற்றும் ஹிப்–ஹாப் பாணிகள் ஒரே மேடையில் சங்கமிக்கும் இந்த நிகழ்ச்சியில், எதிர்பாராத சிறப்பு விருந்தினர்களின் வருகையும் ரசிகர்களின் உற்சாகத்தை அதிகரிக்கிறது.

ரசிகர்களின் வசதிக்காக டிக்கெட் வைத்திருப்போருக்கு இலவச மெட்ரோ ரயில் பாஸ்கள் வழங்கப்படுகின்றன. ரஹ்மானின் காலத்தால் அழியாத பாடல்கள் புதிய வடிவில் நேரலையில் ஒலிக்க, இந்த மறக்க முடியாத அனுபவத்திற்கான டிக்கெட்டுகள் வேகமாக விற்றுத் தீர்கின்றன. இப்போதே Dis–trict by Zomato செயலியில் முன்பதிவு செய்யுங்கள்.

# நிப்பான் பெயின்ட் இந்தியா: ஜெனெண்டர் ஆனந்த் துணைத் தலைவராக நியமனம்!

சென்னை , பிப். 11–

நியூ டெல்லி, பிப்ரவரி 09, 2026: NIPSEA குழுமத்தின் பகுதியான நிப்பான் பெயிண்ட் இந்தியா, தனது ஆட்டோமோட்டிவ் ரீஃபினிஷ் (NPIAR) வணிகத்தின் துணைத் தலைவராக ஜெனெண்டர் ஆனந்த் அவர்கள் நியமித்துள்ளது. இந்தியா, நிப்பான் பெயிண்ட் நேபாளம் மற்றும் இண்டோ கோட் வணிகங்களை உள்ளடக்கிய இந்தப் பொறுப்பில், அவர் மூலோபாய திசைகாட்டி மற்றும் தலைமை கண்காணிப்பு வழங்குவார். இந்த நியமனம் நிறுவனத்தின் 'இந்தியா முதல்' வளர்ச்சி உத்தியுடன் ஒத்துப்போகிறது.



இதுகுறித்து நிப்பான் பெயிண்ட் (இந்தியா) குழும நிர்வாக இயக்குநர் ஷரத் மல்ஹோத்ரா கூறியதாவது: "இந்தியப் பயணத்தின் முக்கிய கட்டத்தில் ஜெனெண்டரின் நியமனம் நமது தலைமை வலிமையை அதிகரிக்கிறது. ஆட்டோமோட்டிவ் துறையில் அவரது விரிவான அனுபவம், இந்தியா, நேபாளம் மற்றும் இண்டோ கோட் வணிகங்களை ஒருங்கிணைந்த முறையில் வளர்க்க உதவும்." ஜெனெண்டர் ஆனந்த் கூறுகையில், "OEM ஒத்துழைப்பு மற்றும் சந்தை விரிவாக்கத்தில் எனது அனுபவத்தை பயன்படுத்தி, செயல்திறன் மேம்பாடு மற்றும் நிலையான வருவாய் வளர்ச்சியை முன்னெடுக்க ஆவலாக உள்ளேன்" என்றார்.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## இப்படி டீ குடித்தால், புற்றுநோயை ஈஸியா தவிர்க்கலாம்..!



காலையில் எழுந்ததும் டீ குடிப்பது கட்டாயம், மாலையிலும் அது கட்டாயம். சிலருக்குச் சாப்பாடு தாமதமாகச் சாப்பிட்டாலும் பரவாயில்லை, ஆனால் டீயை மட்டும் சரியான நேரத்தில் குடிக்க வேண்டும். இவ்வளவு விரும்பப்படும் இந்தத் தேநீர் உண்மையில் ஆரோக்கியத்திற்கு நல்லதா? எவ்வளவு குடிக்க வேண்டும்? எப்போது குடிக்க வேண்டும்? அதிகமாகக் குடித்தால் என்ன ஆகும்? இதையெல்லாம் தெரிந்து கொண்டு குடித்தால் மட்டுமே அது நன்மை தரும்.

தேநீர் அதன் சுவைக்காக மட்டுமல்ல, அதன் ஆரோக்கிய நன்மைகளுக்காகவும் அருந்தப்படுகிறது. தேநீரில் உள்ள ஆண்டிஆக்ஸிடன்ட்கள் உடலில் உள்ள ஃப்ரீ ரேடிக்கல்களைக் குறைத்து, செல்களைப் பாதுகாக்கின்றன. இது இதயப் பிரச்சனைகள் மற்றும் சில நாள்பட்ட நோய்களின் அபாயத்தைக் குறைக்கிறது. தேநீர் அருந்துவது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து, செரிமானத்தை மேம்படுத்துகிறது.

சோர்வு குறைந்து, மனம் சுறுசுறுப்பாக இருக்கும். குறிப்பாக, தேநீரில் உள்ள காஃபின் மற்றும் எல்–தியானைன் ஆகியவற்றின் கலவை ஒருமுகப்படுத்தும் திறனை அதிகரிக்கிறது. இது காபியைப் போல அதிக நடுக்கம் மற்றும் பதட்டத்தை ஏற்படுத்தாமல், விழிப்புணர்வை அளிக்கிறது.

தினமும் சரியான அளவில் தேநீர் அருந்துவது பல நன்மைகளைக் கொண்டுள்ளது. தேநீரில் உள்ள ஃபிளாவனாய்டுகள் கெட்ட கொழுப்பைக் குறைக்க உதவுகின்றன. அவை ஆரோக்கியமான இரத்த நாளங்களுக்குப் பயனுள்ளதாக இருக்கின்றன. கிரீன் டீயில் உள்ள கேடசின்கள் உடலின் வளர்சிதை மாற்றத்தை அதிகரித்து, கொழுப்பைக் கரைக்க உதவுகின்றன. கிரீன் டீ மற்றும் பிளாக் டீ ஆகியவை குடலில் உள்ள நல்ல பாக்டீரியாக்களை அதிகரித்து, செரிமான ஆரோக்கியத்தை மேம்படுத்துகின்றன.

இருப்பினும், நல்லது என்று நினைத்து நாள் முழுவதும் தேநீர் அருந்துவது பிரச்சனைகளுக்கு வழிவகுக்கும். பெரியவர்களுக்கு, ஒரு நாளைக்கு இரண்டு முதல் மூன்று நடுத்தர அளவிலான கோப்பைகள் தேநீர்தான் சரியான அளவு. இதுவே "சரியான அளவு" என்றும் அழைக்கப்படுகிறது. இந்த முறையில் அருந்தினால் புற்றுநோய் மற்றும் இதயப் பிரச்சனைகளைக் குறைக்கலாம் என்று நிபுணர்கள் கூறுகின்றனர். அதற்கு மேல் அருந்தினால், காஃபின் மற்றும் சர்க்கரையால் உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படலாம். குறிப்பாக, தேநீரில் அதிக சர்க்கரை சேர்த்தால், தேவையற்ற கலோரிகள் உடலுக்குள் செல்கின்றன.

தேநீர் அருந்த சரியான நேரமும் மிகவும் முக்கியம். காலையில் காலை உணவுக்குப் பிறகோ அல்லது மதியம் லேசான உணவு சாப்பிட்டு ஒரு மணி நேரத்திற்குப் பிறகோ தேநீர் அருந்துவது நல்லது. இவ்வாறு அருந்தினால் செரிமானப் பிரச்சனைகள் ஏற்படாது. ஆனால் வெறும் வயிற்றில் தேநீர் அருந்துவது நல்லதல்ல. காலையில் எழுந்தவுடன் தேநீர் அருந்தினால், வயிற்று அமிலம் அதிகரித்தல், குமட்டல், நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சனைகள் ஏற்படலாம்.

தூங்குவதற்கு முன்பும் தேநீர் அருந்துவதைத் தவிர்க்க வேண்டும். தூங்குவதற்கு குறைந்தது ஆறு மணி நேரத்திற்கு முன்பு காஃபின் உள்ள தேநீர் அருந்தாமல் இருப்பது நல்லது. இல்லையெனில், தூக்கம் வராமல் இருப்பது, நள்ளிரவில் தூக்கத்திலிருந்து விழிப்பது போன்ற பிரச்சனைகளை நீங்கள் சந்திக்க நேரிடும்.

ஒரு நாளைக்கு ஐந்து அல்லது ஆறு கோப்பைகளுக்கு மேல் தேநீர் அருந்தினால் சில உடல்நலப் பிரச்சனைகள் ஏற்படலாம். தேநீரில் உள்ள டானின்கள் இரும்பை உறிஞ்சும் திறனைக் குறைக்கின்றன. இது இரத்த சோகை ஏற்படும் அபாயத்தை அதிகரிக்கிறது. மேலும், அதிகப்படியான காஃபின் வயிற்றில் அமிலத்தன்மையை அதிகரித்து, வாயு, குமட்டல் மற்றும் நெஞ்செரிச்சல் போன்ற பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது.

தூக்கமின்மை மற்றும் பதட்டமும் அதிகரிக்கின்றன. ஏற்கனவே இரத்த சோகை அல்லது வயிற்றுப் பிரச்சனைகள் உள்ளவர்கள் தேநீர் அருந்துவதற்கு முன்பு நிச்சயமாக ஒரு மருத்துவரை அணுக வேண்டும்.

பலரிடம் உள்ள மற்றொரு பழக்கம், ஒரே தேநீரை மீண்டும் மீண்டும் சூடுபடுத்துவது. இவ்வாறு செய்வது தேநீரின் சுவையைக் குறைப்பது மட்டுமல்லாமல், அதன் நன்மை தரும் பண்புகளையும் குறைக்கிறது. பால் சேர்த்த தேநீரை மீண்டும் சூடுபடுத்துவது பாக்டீரியாக்கள் வளர வழிவகுக்கும். அதனால்தான் தேநீரை புதிதாகத் தயாரித்து அருந்துவதே சிறந்தது.

மொத்தத்தில், தேநீர் ஆரோக்கியத்திற்கு நல்லது. ஆனால் சரியான நேரத்தில், சரியான அளவில் அருந்தினால் மட்டுமே அது நன்மை பயக்கும். தினமும் அதிகமாகக் குடிப்பதற்குப் பதிலாக, எப்போதாவது கிரீன் டீ அல்லது மூலிகை தேநீர் அருந்துவது நல்லது. பழக்கமாக அல்லாமல், விழிப்புணர்வுடன் தேநீர் அருந்தினால்தான் உண்மையான பலன் கிடைக்கும்.

# நபார்டு வங்கிக்கு வரி விலக்கு அளிக்க வேண்டும்: மாநிலங்களவையில் ராஜேஷ்குமார் எம்.பி.!



டெல்லி, பிப். 11–

டில்லியில் நடைபெற்று வரும், நாடாளு மன்ற கூட்டத்தொடரில், மக்களவையில் நடைபெற்ற விவாதத்தில், நாமக்கல் திமுக ராஜ்யசபா எம்.பி. ராஜேஷ்குமார் கலந்து கொண்டு பேசியதாவது:

இந்தியா முழுமைக்கும், கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக தேசிய வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) விளங்குகிறது. வேளாண் கடன், ஊரக உட்கட்டமைப்பு மேம்பாடு, விவசாயிகள் மற்றும் கிராமப்புற மக்களுக்கு நிலையான வருமான வாய்ப்புகளை உருவாக்குவதில் நபார்டு முக்கியப் பங்கு வகிக்கிறது.

நாட்டின் செல்வத்தின் அடித்தளமாக இருக்கும் ஊரக வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும் உண்மையான தாய்ப்ப றவையாக நபார்டு விளங்கி வருகிறது. நபார்டு வங்கி, தற்போது செயல்பட்டு வரும் நிதி கட்டமைப்பு, அதன் நோக்கங்களை முழுமையாக நிறைவேற்ற அதன் மீதான வரி விதிப்புகள் தடையாக உள்ளது. நபார்டு மீது விதிக்கப்படும் வரிகள், ஊரக மக்களின் நலனுக்காக நேரடியாக செலவிடப்பட வேண்டிய வளங்களை குறைத்து வருகிறது. எனவே மத்திய அரச நபார்டு மீது விதிக்கப்பட்டுள்ள வருவமான வரிகளை உடனடியாக நீக்க வேண்டும்.

மேலும், நபார்டு நிர்வகித்து வரும் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதிக்கான (ஆர்ஐடிஎப்) ஒதுக்கீடு கணிசமாக உயர்த்தப்பட வேண்டும். ஊரக உட்கட்டமைப்பு, பாசன வசதிகள், சந்தை அணுகல் போன்றவற்றிற்கு ஆர்டிஎப் நிதி மிகவும் அவசியமானதாக உள்ளது. தற்போதைய நிதி ஒதுக்கீடு போதுமானதாக இல்லாததால் கூடுதல் நிதி ஒதுக்க வேண்டும். எம்எஸ்எம்இ, ஹட்கோ, சிட்பி போன்ற அமைப்புகள் முக்கியமானவை என்றாலும், அவற்றுக்கான நிதியுதவி நபார்டின் வளங்களை பாதிக்கும் வகையில் இருக்கக் கூடாது.

நபார்டு தனது பணிகளை திறம்பட நிறைவேற்ற அதிகமான பட்ஜெட் ஆதரவு, நிர்வாக சுயாதீனம், தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் மனித வளங்களில் முதலீடு அவசியம். நபார்டு வங்கியை வலுப்படுத்துவது நாட்டின் ஊரக பொருளாதாரத்தையே வலுப்படுத்துவதாகும்.

எனவே நபார்டு வங்கிங்கு வரிவிலக்கு வழங்கி, ஆர்டிஎப் நிதி ஒதுக்கீட்டை உயர்த்தி, ஊரக வளத்தை வளர்த்தெடுக்கும் சக்தியாக அதனை மாற்ற வேண்டும் என்று அவர் பேசினார்.




பழனி பெரியநாயகி அம்மன் கோவிலில் இந்து அறநிலையத்துறை சார்பில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வழிகாட்டுதலின்படி, மூத்த தம்பதியினருக்கு கோவில் சார்பில் சிறப்பு செய்யும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கோவில் துணை ஆணையர் வெங்கடேசன், நகர் மன்ற துணைத் தலைவர் கந்தசாமி, கவுன்சிலர் சுரேஷ், கோவில் சூப்பிரண்டு அழகர்சாமி, திருக்கோவில் லட்சுமிநாராயணன், பேஸ்கார் ராஜா, மணியம் ரஞ்சித் ஆகியோர் உள்ளனர்.

# ஒட்டன்சத்திரத்தில் நாம் தமிழர் சட்டமன்ற வேட்பாளர் அறிமுக கூட்டம்!




ஒட்டன்சத்திரம், பிப். 11–

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரத்தில் நாம் தமிழர் கட்சியின் சார்பில் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற வேட்பாளராக பழ. ரகுபதியை அறிமுக கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஒட்டன்சத்திரம் சட்டமன்றத் தேர்தல் 2026 இல் ஒட்டன்சத்திரம் தொகுதியில் நிறைவேற்றப் போகும் வரைவுகள் 20க்கும் மேற்பட்ட வரைவுகளை நாம் தமிழர் கட்சியின் பொறுப்பாளர்கள் முன்மொழிந்தனர். இந்நிகழ்ச்சியில் நாம் தமிழர் கட்சியின் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் இசை.மதிவாணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நாம் தமிழர் கட்சியின் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற வேட்பாளர் அறிமுக நிகழ்ச்சியில் மேற்கு ஒன்றிய செயலாளர் புவனேஸ்வரன்,தர்ஷன்,திருமலைச்சாமி, தரணி கிருஷ்ணன்,மாணவர் பாசறை செயலாளர் செல்வா, மண்டல பொறுப்பாளரும் ஆத்தூர் சட்டமன்ற பொறுப்பாளருமான சைமன் ஜஸ்டின் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



பழனியில் முத்தமிழ் முருகன் மாநாடு தீர்மானத்தின்படி, பழனி முருகன் மலைக்கோவில் செல்லும் படிப்பாதையில், 15 அடி உயரம் கொண்ட கற்சிலை வேல் அமைக்கப்பட்டுள்ளது.

# பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம்!




பழனி, பிப். 11–

பழனி பஸ் நிலையம் மயில் ரவுண்டானா அருகே ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பழனியை தலைமை இடமாகக் கொண்டு பழனியை மாவட்டமாக அறிவிக்க கோரி பாரதிய ஜனதா கட்சி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாநில செயற்குழு உறுப்பினர் என்.கனகராஜ் தலைமை வகித்தார். தேசிய பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் திருமலைசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் பழனிச்சாமி, நகர தலைவர் ஆனந்தகுமார், பழனி கிழக்கு தலைவர் கே.பிரகாஷ், பழனி மேற்குத் தலைவர் கவிதாசிவகுமார், மாவட்ட பொருளாளர் பி.ஆனந்த்பெருமாள், மாவட்டத் துணைத் தலைவர்கள் மதன்குமார், எஸ் ரஞ்சிதம், மாவட்ட செயலாளர்கள் ஜெய்கணேஷ், ஸ்ரீகலா, பரமேஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாவட்ட பொதுச் செயலாளர் செந்தில்குமார் வரவேற்றார். மாவட்ட தலைவர் ஜெயராமன், பூவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள்.

இதில் அமமுக நல்லசாமி, வீரக்குமார், விஸ்வ ஹிந்து பரிஷத் செந்தில்ஜி, இந்து முன்னணி பாலன், தென்னிந்திய பார்வேர்டு பிளாக் சபரி, தமிழ் மாநில காங்கிரஸ் நகர தலைவர் சண்முகநாதன், பாட்டாளி மக்கள் கட்சி மாவட்ட செயலாளர் வைரமுத்து, அதிமுக கவுன்சிலர் நடராஜன் ஆகியோர் உட்பட ஏராளமான ஒரு பங்கேற்றனர். இக்கூட்டத்தில் ஆர்ப்பாட்ட உரையை, முன்னாள் பாரதிய ஜனதா கட்சி தலைவர் கே அண்ணாமலை பேசினார்.

# மதுரை ரயில் நிலையத்தில் சிறப்பான நான்கு சக்கர வாகன காப்பகம்!

மதுரை, பிப். 11–

மதுரை ரயில் நிலையத்தில் சிறப்பான நான்கு சக்கர வாகன காப்பகம் வாகன காப்பகங்கள் எப்பொழுதும் ரயில் நிலைய கட்டிடத்திற்கு சற்று தூரத்தில் இருப்பது வழக்கம். எனவே பயணிகளின் வசதிக்காக மதுரை ரயில் நிலையத்தில் ரயில் நிலைய கட்டிட நுழைவுவாயில் அருகில் பிரிமியம் (சிறப்பு) நான்கு சக்கர வாகன காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த வாகன காப்பகத்தில் நான்கு சக்கர வாகனம் நிறுத்த இரண்டு மணி நேரத்திற்கு 50 ரூபாயும் 6 மணி நேரத்திற்கு 100 ரூபாயும் 12 மணி நேரத்திற்கு 200 ரூபாய் 24 மணி நேரத்திற்கு 400 ரூபாயும் வசூலிக்கப்படுகிறது. இந்த ரயில் நிலைய கிழக்கு நுழைவுவாயில் வாகன காப்பகத்தை தற்காலிகமாக 60 நாட்களுக்கு பராமரிக்க தற்போது ஒப்பந்த புள்ளிகள் கோரப்பட்டுள்ளன.

இந்த ஒப்பந்தப் புள்ளிகள் வியாழக்கிழமை (பிப்ரவரி 12) காலை 10 மணி முதல் மாலை 3 மணிக்குள் மதுரை கோட்ட அலுவலகத்தில் உள்ள வர்த்தக பிரிவில் சமர்ப்பிக்கப்பட வேண்டும். மேலும் விவரங்களுக்கு www.sr.indianrailways.gov.in என்ற இணையதளத்தில் உள்ளது. இந்த சிறப்பு வாகன காப்பகத்தை தவிர கிழக்கு நுழைவுவாயிலில் நவீன வசதிகளுடன் விசாலமான பல்லடுக்கு நான்கு சக்கர வாகன காப்பகம் ஒன்றும் மதுரை ரயில் நிலையத்தில் கட்டப்பட்டு வருகிறது. மேற்கு நுழைவாயிலில் புதி தாக கட்டப்பட்ட பல்லடுக்கு நான்கு சக்கர வாகன காப்பகமும் செயல்பட்டு வருகிறது.



இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்
127, T.P.K.ரோடு, மதுரை.
Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை
Ph: 98659 88881

# வேலை வாய்ப்பு

## தமிழ்நாடு அரசு வழக்குத் துறை – ஒட்டுநர் காலியிடங்கள்

**TN Litigation Department Recruitment 2026**

- Vacancy: 05
- Post Name: Driver
- Qualification: 8th
- Selection Process: Short Listing, Interview

Organization Name: Tamilnadu Litigation Department
Notification No: 1/2026, Dated 05.02.2026
Job Category: Tamilnadu Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 05 Driver Posts
Place of Posting: Chennai
Starting Date: 07.02.2026
Last Date: 16.02.2026
Apply Mode: Offline
Official Website: https://www.tn.gov.in/

## ஆயுதப்படை மையம் மற்றும் பள்ளி அஹில்யாநகர் 12 காலியிடங்கள்

Organization Name: Armoured Corps Centre and School Ahilyanagar
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 12 Group C Posts
Place of Posting: 61 Cavalry, at Jaipur and New Delhi
Starting Date: 07.02.2026
Last Date: 27.02.2026
Apply Mode: Offline
Official Website: https://www.indianarmy.nic.in/

## இந்தியன் வங்கி 07 காலியிடங்கள்

Organization Name: Indian Bank
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 07 Officer JMG Scale–I and Clerks (Sports Person) Posts
Place of Posting: Chennai
Starting Date: 04.02.2026
Last Date: 24.02.2026
Apply Mode: Online
Official Website: https://indianbank.bank.in/

## பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் 22 காலியிடங்கள்

Organization Name: BHEL Bharat Heavy Electricals Limited
Notification No: FTA 01/2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Fixed Tenure Basis
Duration: The period of engagement shall be for an initial period of Two years or till the completion of assignment (whichever is earlier).
Total No of Vacancies: 23 FTA Gr III (Supervisors) Posts
Place of Posting: Noida
Starting Date: 03.02.2026
Last Date: 24.02.2026
Apply Mode: Online
Official Website: https://careers.bhel.in/

## இந்திய புள்ளியியல் நிறுவனம் – 43 காலியிடங்கள்

Organization Name: Indian Statistical Institute
Notification No: REC–01/2026–1, KOL Date: 22.01.2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 43 Associate Scientist 'A' , Section Officer (Accounts) , Section Officer (General) , Scientific Assistant 'a'/ Scientific Assistant (Library) 'A, Engineering Assistant (Civil) 'A' , Assistant (Laboratory) 'A', Carpenter 'A' , Electrician 'A' , Pharmacist 'A', Driver 'A', Binder 'A', Operator Mechanic (Audio–Visual) 'A' , Assistant (Printing) 'A' , Assistant (Library) 'A', Operator Mechanic (Lift) 'A', Cook 'A' Posts
Place of Posting: All Over India
Starting Date: 24.01.2026
Last Date: 22.02.2026
Apply Mode: Online
Official Website: https://web.isical.ac.in/

## சி.எல்.ஆர்.ஐ., மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் – 13 காலியிடங்கள் சென்னை

Organization Name: CSIR CLRI, Central Leather Research Institute
Notification No: 01/2026
Job Category: Central Govt Jobs
Employment Type: Regular Basis
Total No of Vacancies: 13 MTS, JSA, Junior Stenographer Posts
Place of Posting: Chennai
Starting Date: 23.01.2026
Last Date: 02.03.2026
Apply Mode: Online
Official Website: https://clri.org/



# H1B விசா திட்டத்தையே ரத்து செய்கிறதா அமெரிக்க அரசு? நாடாளுமன்றத்தில் மசோதா தாக்கல்!!

அமெரிக்கா, பிப். 11–

அமெரிக்காவை சேர்ந்த நிறுவனங்கள் வெளிநாட்டில் இருக்கக்கூடிய நிபுணர்களை வேலைக்கு அமர்த்துவதற்கு பயன்படுத்தக்கூடிய ஒரு விசா திட்டம் தான் ஹெச்1பி (H1B) விசா. இந்த திட்டத்தில் அமெரிக்காவில் வேலை செய்பவர்களில் கிட்டத்தட்ட 70 சதவீதத்திற்கும் அதிக மானவர்கள் இந்தியாவை சேர்ந்தவர்கள். அந்த விசா விண்ணப்பங்களை ஆய்வு செய்து ஒப்புதல் வழங்குவதற்கு வழக்கத்தை விட கூடுதலாக கால அவகாசம் எடுத்துக் கொள்கின்றன. பல மாதங்கள் வரை விண்ணப்பதாரர்கள் காத்திருக்கும் சூழல் உண்டாகி இருக்கிறது.

இந்த சூழலில் அமெரிக்க நாடாளுமன்றத்தில் ஹெச்1பி விசா திட்டத்தை முழுவதுமாக நிறுத்த வேண்டும் என ஒரு




வகையில் ஹெச்1பி விசா திட்டத்தில் கொண்டுவரக்கூடிய எந்த ஒரு மாற்றமும் இந்திய தொழில்நுட்ப வல்லுனர்களை பெருமளவில் பாதிக்க செய்கிறது. டிரம்ப் நிர்வாகம் ஏற்கனவே விசா வழங்குவதில் பல்வேறு கெடுபிடிகளை கடைப்பிடித்து வருகிறது. விசா வேண்டி விண்ணப்பம் செய்பவர்களின் சமூக வலைதள கணக்குகளை ஆய்வு செய்ய வேண்டும், கருத்து சுதந்திரத்திற்கு எதிரான செயல்களில் ஈடுபடுபவராக இருந்தால் அவரின் விசாக்களை ரத்து செய்யலாம் என அறிவித்திருக்கிறது. இதனால் அமெரிக்க தூதரகங்கள் ஹெச்1பி மசோதா தாக்கல் செய்யப்பட்டு இருக்கிறது. குடியரசு கட்சி எம்பி கிரேக் ஸ்டியூப் EXILE ACT என்ற பெயரில் ஒரு மசோதாவை தாக்கல் செய்திருக்கிறார். அதில் அமெரிக்க நிறுவனங்கள் ஹெச்1பி விசா நடைமுறையை தவறாக பயன்படுத்துகின்றனர் என கூறியிருக்கிறார். குறைந்த சம்பளத்தில் வெளிநாடுகளில் இருந்து ஊழியர்களை வரவழைத்து வேலை வாங்குகிறார்கள் இதனால் அமெரிக்க குடிமகன்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்காமல் போகிறது என கூறியிருக்கிறார். அமெரிக்கா குடிமகன்களின் நலன்களையும் தேசிய நலன்களையும் கருத்தில் கொள்ளாமல் ஹெச்1பி விசா திட்டத்தை நிறுவனங்கள் தவறாக பயன்படுத்துகின்றன என அவர் கூறியிருக்கிறார். இந்த விசா மூலம் இங்கே வருகை தரக்கூடிய வெளிநாட்டவர்களால் அமெரிக்காவிலேயே பயின்ற ஏராளமான இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைப்பதில்லை என்கிறார். அமெரிக்காவில் மருத்துவம் பயின்ற பத்தாயிரம் மருத்துவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை அதற்கு மாற்றாக வெளிநாட்டில் இருந்து 5000 மருத்துவர்களை வரவழைத்து நிறுவனங்கள் வேலைக்கு அமர்த்திருக்கின்றன எனக் கூறியிருக்கிறார். மைக்ரோசாப்ட் நிறுவனம் 16,000 அமெரிக்கர்களை வேலையில் இருந்து நீக்கிவிட்டு ஹெச்1பி விசாவில் 9 ஆயிரம் பேரை வரவழைத்து வேலைக்கு அமர்த்தி இருக்கிறது என தெரிவித்திருக்கிறார்.

அமெரிக்காவை சேர்ந்த பல்வேறு முன்னணி நிறுவனங்களும் அமெரிக்கர்களை வேலையில் இருந்து நீக்கிவிட்டு ஹெச்1பி விசாவில் குறைந்த சம்பளத்திற்கு வெளிநாட்டிலிருந்து ஊழியர்களை அழைத்து வந்து வேலையில் அமத்துகின்றன என சுட்டிக்காட்டி இருக்கிறார். 2027ஆம் ஆண்டுக்குள் இந்த திட்டத்துக்கு முடிவு கட்ட வேண்டும் என அவர் வாதிட்டுள்ளார்.

# ராமதாஸ் பெயரில் புதுக்கட்சி உதயம்!



சென்னை, பிப். 11–

பா.ம.க., நிறுவனர் ராமதாஸ் ஆதரவாளர், ‘அய்யா பாட்டாளி மக்கள் கட்சி’ என்ற பெயரில், புதுக்கட்சி துவக்கி இருப்பதாக, தகவல் வெளியாகி உள்ளது.

ராமதாஸ் – அன்புமணி இடையே ஏற்பட்ட மோதலில், பா.ம.க., உடைந்தது. ஆனால், கட்சியும், மாம்பழ சின்னமும் அன்புமணிக்கு தான் சொந்தம் என, தேர்தல் கமிஷன், நீதிமன்றம் அறிவித்துள்ளன. இதனால் கோபமடைந்த ராமதாஸ், வரும் தேர்தலில், அன்புமணிக்கு எதிராக தன் ஆதரவாளர்களை களமிறக்க ஆலோசித்து வருகிறார்.

இந்நிலையில், அவரது அணியின் தலைமை நிலையச் செயலர் அன்பழகனின் மகன் முகிலன், தன் தலைமையில், ‘அய்யா பாட்டாளி மக்கள் கட்சி’ என்ற பெயரில், புதிய கட்சியை உருவாக்கி உள்ளார்.

பா.ம.க., கொடியில் ராமதாஸ் படத்தை வைத்து, கொடி தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த கட்சியை பதிவு செய்ய, தேர்தல் கமிஷனிடம் கடிதம் கொடுக்கப்பட்டுள்ளது. இதற்கு ராமதாஸ் ஆதரவு உள்ளதா என்பது தெரியவில்லை.

# சபாநாயகர் நாற்காலியில் அமர மாட்டேன்; நம்பிக்கையில்லா தீர்மானத்தால் ஓம் பிர்லா முடிவு!



புதுடில்லி, பிப். 11–

‘‘எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தள்ளுபடி ஆகும் வரை சபாநாயகர் நாற்காலியில் அமரப் போவதில்லை’’ என ஓம் பிர்லா முடிவு செய்து உள்ளார்.

பார்லி., பட்ஜெட் கூட்டத்தொடர் துவங்கியதில் இருந்தே, லோக்சபாவில் அலுவல்கள் பாதிக்கப்பட்டு வருகின்றன. நேற்று மதிய உணவு இடைவேளையின் போது, காங்., உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள், லோக்சபா செக்ரட்டரி ஜெனரல் உத்பல் குமார் சிங்கின் அலுவலகத்திற்கு சென்றனர். அங்கு, சபாநாயகர் ஓம் பிர்லா மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டுவரவேண்டுமென்று வலியுறுத்தி நோட்டீசை வழங்கினர்.

இதில், எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 118 எம்.பி.,க்கள் கையெழுத்திட்டு இருக்கின்றனர். நம்பிக்கையில்லா நோட்டீஸை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு லோக்சபா செக்ரட்டரி ஜெனரல் இடம் ஓம் பிர்லா கேட்டுக் கொண்டுள்ளார். சபாநாயகரை நீக்கும் தீர்மானம் அடுத்த மாதம் மார்ச் 9ம் தேதி பட்ஜெட் கூட்டத்தொடரின் இரண்டாம் பகுதியில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையே, எதிர்க்கட்சிகள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் முடிவுக்கு வரும் வரை லோக்சபா சபாநாயகர் நாற்காலியில் அமரப் போவதில்லை என ஓம் பிர்லா முடிவு செய்து உள்ளார். நம்பிக்கை இல்லா தீர்மானம் தரப்பட்டாலும் சபாநாயகர் தனது பணிகளை வழக்கம்போல் கவனிக்கலாம். அலுவலை கவனிக்க கூடாது என்று எந்த விதியும் கிடையாது. எனினும் தார்மீக அடிப்படையில், சபாநாயகர் ஓம் பிர்லா இந்த முடிவை எடுத்துள்ளார்.

# இனி அரசு நிகழ்ச்சிகளில் வந்தே மாதரம் பாடல் கட்டாயம்; மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு!

புதுடில்லி, பிப். 11–

இனி அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முன்னதாக ‘வந்தே மாதரம்’ பாடலையும் கட்டாயம் பாட வேண்டும் என மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. வந்தே மாதரம் பாடல் இசைப்பதற்கு புதிய விதிமுறைகளை மத்திய உள்துறை அமைச்சகம் வகுத்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:





* அரசு நிகழ்ச்சிகளில் தேசிய கீதத்திற்கு முன்னதாக ‘வந்தே மாதரம்’ பாடலையும் கட்டாயம் பாட வேண்டும்

* வந்தே மாதரம் பாடல் இசைக்கப்படும் போது பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து நிற்க வேண்டும்.

* ஜனாதிபதி, கவர்னர் நிகழ்ச்சிகளின் தொடக்கத்திலும், முடிவிலும் வந்தே மாதரம் பாடல் இசைக்கப்பட வேண்டும்.

* ஆகாஷ்வானி மற்றும் தூர்தர்ஷன் போன்ற அரசு ஊடகங்களில் ஒளிபரப்பப்படும் ஜனாதிபதி உரைக்கு, முதலிலும், கடைசியிலும் வந்தே மாதரம் இசைக்கப்பட வேண்டும். இவ்வாறு மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்து ள்ளது. வந்தே மாதரம் பாடல் 150வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் வேளையில், மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவு பிறப்பித்து இருக்கிறது.

# மீண்டும் உயர்ந்த தங்கம் விலை!



சென்னை, பிப். 11–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.160 உயர்ந்து ரூ.1,16,800–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.80 உயர்ந்து ரூ.14,600–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வெள்ளி விலையில் 2–வது நாளாக இன்றும் மாற்றம் இல்லை. ஒரு கிராம் வெள்ளி 300 ரூபாய்க்கும் பார் வெள்ளி ரூ.3 லட்சத்துக்கும் விற்பனையாகிறது.

# சொந்த மாவட்டத்தில் பணியாற்றும் தேர்தல் அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்யுங்கள்! தமிழக அரசுக்கு தேர்தல் ஆணையம் கடிதம்!!

சென்னை, பிப். 11–

தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் ஓரிரு மாதங்களில் நடைபெற உள்ள நிலையில், இந்தியதேர்தல் ஆணையம், தேர்தலை நடத்துவதில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள அதிகாரிகள் சொந்த மாவட்டங்களில் பணியாற்றுபவர்களாக இருந்தால், அவர்களைப் பணியிட மாற்றம் செய்ய வேண்டும் என்று தமிழ்நாடு புதுச்சேரி உள்படதேர்தல் நடைபெற உள்ள மாநிலங்களுக்குகடிதம் எழுதி உள்ளது.

இதுதொடர்பாக தமிழ்நாடு, மேற்கு வங்கம், கேரளம், அஸ்ஸாம் மற்றும் புதுச்சேரி தலைமைச் செயலர்களுக்குத் தேர்தல் ஆணையம் அனுப்பியுள்ள கடிதத்தில், தேர்தல் நடைபெற உள்ள மாநிலம் அல்லது யூனியன் பிரேதசத்தில், தேர்தலை நடத்துவதில் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ள அதிகாரிகளை, அவர்களின் சொந்த மாவட்டங்களில் பணியமர்த்தக் கூடாது. அந்த அதிகாரிகள் நீண்ட காலமாக ஒரே இடத்தில் பணியாற்றி வந்தால், அதே இடத்தில் அவர்கள் தொடர்ந்து நீடிக்கக் கூடாது. அவர்கள் பணியிடமாற்றம் செய்யப்பட வேண்டும்.




தேர்தல் பணியுடன் சம்பந்தப்படாத அரசு மருத்துவர்கள், பொறியாளர்கள், ஆசிரியர்கள் அல்லது கல்வி நிறுவன முதல்வர்களைப் பணியிட மாற்றம் செய்ய வேண்டிய அவசியமில்லை.

தேர்தலின் போது ஏராளமான அரசு ஊழியர்கள் பலவகையான தேர்தல் பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்நிலையில், பெரிய அளவில் பணியிட மாற்றங்களை மேற்கொள்ளச் செய்து அரசு இயந்திரத்துக்கு இடையூறை ஏற்படுத்த தேர்தல் ஆணையம் விரும்பவில்லை.

எனவே, இந்தப் பணியிட மாற்றம் என்பது தேர்தல் பணிகளில் துறை அதிகாரி அல்லது மண்டல மாஜிஸ்திரேட்டாக நியமிக்கப்பட்டுள்ளவர்கள், சம்பந்தப்பட்ட துறையின் மாநிலத் தலைமையகத்தில் நியமிக்கப்பட்டுள்ள அதிகாரிகள் உள்ளிட்டோருக்குப் பொருந்தாது.

மேலும், கடந்த காலங்களில் தேர்தல் ஆணையத்தின் பரிந்துரை காரணமாக ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளான அதிகாரிகள், அலுவலர்களுக்குத் தேர்தல் பணிகளை ஒதுக்கக் கூடாது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்களவை மற்றும் சட்டப்பேரவைத் தேர்தல்களின்போது அதிகாரிகளைப் பணியிடமாற்றம் செய்வது தொடர்பான அறிவுறுத்தல்களைத் தேர்தல் ஆணையம் வெளியிடுவது வழக்கமான நடவடிக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆட்சியில் பங்கு விவகாரம்: பிடி கொடுக்காத திமுக; இறங்கி வந்த காங்கிரஸ் - டெல்லியில் நடந்தது என்ன?

சென்னை, பிப். 11–

தமிழ்நாட்டில் சட்டசபை தேர்தல் நடக்கத் தொடங்கிய 1952–ம் ஆண்டு முதல் தொடர்ந்து 15 ஆண்டுகள் காங்கிரஸ் கட்சியே ஆட்சியில் இருந்தது. 1967–ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியை பிடித்த பிறகு, தி.மு.க., அ.தி.மு.க. என திராவிட கட்சிகளே மாறி மாறி ஆட்சி அமைத்து வருகின்றன. அவர்களுடன் கூட்டணி வைக்க வேண்டிய நிலைக்கு காங்கிரஸ் கட்சியும் தள்ளப்பட்டது.

கடந்த 2006–ம் ஆண்டு முதல் தொடர்ந்து 3 சட்டசபை தேர்தல்களில் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி தொடர்கிறது. 2006 தேர்தலில் 50 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 34 இடங்களில் வெற்றி பெற்றது.

**இந்த முறை தொடருமா?**

2011–ம் ஆண்டு நடந்த சட்டசபை தேர்தலில்



63 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் வெறும் 5 இடங்களில் மட்டுமே வெற்றி பெற்றது. அதேபோல், 2016 தேர்தலிலும் 41 தொகுதிகளில் போட்டியிட்டு 8 இடங்களை மட்டுமே கைப்பற்றியது. கடந்த (2021) சட்டசபை தேர்தலில் 25 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 18 இடங்களில் வெற்றி பெற்றது. இப்படி தொடர்ந்து 20 ஆண்டுகள் தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்ற காங்கிரஸ் கட்சி, இந்த முறையும் தொடருமா? என்ற கேள்வி எழுந்தது.

**காலம் தாழ்த்திய தி.மு.க.**

காரணம், காங்கிரஸ் கட்சியில் கடந்த ஆண்டு டிசம்பர் மாதமே தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தைக்கு குழு அமைக்கப்பட்டது. ஆனால், காங்கிரஸ் கட்சியோ எப்போதும் இல்லாத வகையில், இந்த முறை ஆட்சி அதிகாரத்தில் பங்கு, 41 தொகுதிகள், 2 ராஜ்ய சபா சீட், உள்ளாட்சி தேர்தலில் 20 சதவீதம் இடம் என அடுக்கடுக்கான கோரிக்கைகளை வைத்ததால், கூட்டணிக்கு தலைமை தாங்கும் தி.மு.க. அதிருப்தி அடைந்தது. அதனால், கூட்டணி கட்சிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு குழுவை அமைக்காமலும் காலம் தாழ்த்தி வந்தது.

**மாவட்ட தலைவர்கள் கூட்டம்**

இந்த நிலையில், டெல்லியில் நேற்று காங்கிரஸ் கட்சியின் மாவட்ட தலைவர்கள் கூட்டம் அகில இந்திய அளவில் நடைபெற்றது. இதில் பங்கேற்க அனைத்து மாநிலங்களில் இருந்தும் நிர்வாகிகள் சென்றனர். தமிழகத்தில் இருந்து முன்னாள் நிதி அமைச்சர் ப.சிதம்பரம், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, சட்டமன்ற காங்கிரஸ் தலைவர் ராஜேஷ்குமார் உள்ளிட்டோர் சென்றிருந்தனர்.

**தமிழக நிர்வாகிகளுடன் பேச்சு**

கூட்ட இடைவெளியின்போது காங்கிரஸ் தலைவர்கள் ராகுல்காந்தி, மல்லிகார்ஜுன கார்கே ஆகியோர் சட்டசபை தேர்தல் நடைபெற உள்ள 5 மாநில காங்கிரஸ் நிர்வாகிகளை அழைத்து பேசினார்கள். அவ்வாறு, தமிழ்நாடு நிர்வாகிகளை அழைத்து பேசியபோது, அவர்கள் கூட்டணிக்கு தலைமை தாங்கும் தி.மு.க. மீது அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை வைத்தனர். ‘‘நாம் தொகுதி பங்கீடு குறித்து பேச்சு வார்த்தை நடத்த குழு அமைத்து 70 நாட்கள் ஆகியும் இதுவரை நம்மை அழைத்து பேசவில்லை. தி.மு.க. தலைமையும், கட்சி நிர்வாகிகளும் நம்மை மதிப்பது இல்லை’’ என்று அதிருப்தியை வெளிப்படுத்தி உள்ளனர்.

**35 தொகுதிக்கு குறையக்கூடாது**

இதை கேட்ட காங்கிரஸ் மேலிட தலைவர்களோ, ‘‘சென்னை திரும்பிய உடன் நேராக தி.மு.க. தலைமையிடம் சென்று ஏன் பேச்சு வார்த்தைக்கு இன்னும் குழு அமைக்காமல் உள்ளீர்கள். உடனே எங்களை அழைத்து பேசுங்கள் என்று கோரிக்கை வையுங்கள். அவர்கள் (தி.மு.க.) ஆட்சி அதிகாரத்தில் பங்கு தர மறுப்பதால், தொகுதிகளையாவது 41 ஆக கேட்டு வாங்குங்கள். எந்த வகையிலும் 35–க்கு குறையக்கூடாது.

ஆட்சி அதிகார கோரிக்கையை தேர்தலில் வெற்றி பெற்ற பிறகு பார்த்துக்கொள்வோம்’’ என்று தெரிவித்ததாக கூறப்படுகிறது. இவ்வாறு காங்கிரஸ் கட்சியும் இறங்கி வந்ததை கேள்விப்பட்ட உடன் தி.மு.க. தலைமையும் உடனடியாக தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை 22–ந் தேதி தொடங்கும் என்று அறிவித்துவிட்டது.

**கூட்டணி தொடரும்**

ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்ற கோரிக்கையில் காங்கிரஸ் அழுத்தமாக இருந்ததால், தி.மு.க. காலம் தாழ்த்தி வந்தது. தற்போது காங்கிரஸ் கட்சி இறங்கி வந்தாலும், தொகுதி பங்கீட்டு பேச்சு வார்த்தையை உடனே தொடங்காமல், 10 நாட்கள் கழித்தே தொடங்க தி.மு.க. தலைமை அறிவிப்பு வெளியிட்டுள்ளது. அதனால், கூட்டணிக்குள் உரசல் தொடர்ந்தாலும், இந்தத் தேர்தலிலும் தி.மு.க. – காங்கிரஸ் கூட்டணி தொடரும் என்றே தெரிகிறது.

## சினிமா துளிகள்..!

# அல்லு அர்ஜூனை சந்திக்க 42 கட்டுப்பாடுகளா?



தெலுங்கு நட்சத்திர நடிகரான அல்லு அல்ஜூனை சந்திப்பதற்கு 42 கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பாக வழிகாட்டு நெறிமுறைகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் ஊடகவியலாளர் ஒருவர் செய்தி வெளியிட்டிருந்தார். இது தெலுங்கு சினிமா உலகில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

இந்த நிலையில் அல்லு அர்ஜூன் அலுவலகம் இது தொடர்பாக அதிகாரப்பூர்வ அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் ‘‘அல்லு அர்ஜூனுக்கு எதிரான இந்த குற்றச்சாட்டு முற்றிலும் அடிப்படை ஆதாரமற்றது. உண்மைக்கு புறம்பானது. அல்லு அர்ஜூன் எப்போதும் கண்ணியத்துடனும், மரியாதையுடனும் நடந்து கொண்டார். அவரது அணி இந்த பொய் குற்றச்சாட்டை மிகவும் சீரியஸாக எடுத்துக் கொண்டுள்ளது. இந்த குற்றச்சாட்டை வெளியிட்டவருக்கு எதிராக அவதூறு வழக்கு தொடர்வதற்கான வேலையை தொடங்கியுள்ளது. மேலும், சரிபார்க்கப்படாத தகவல்களைப் பரப்புவதைத் தவிர்க்கவும்’’ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அல்லு அர்ஜூன் கண்ணை நேருக்குநேர் பார்க்கக் கூடாது, கைக்குலுக்கக் கூடாது, மீடியாவை சந்திக்கும்போது அவரிடம் கேட்கும் கேள்விகள் தொடர்பாக முன்னதாக ஒப்புதல் பெற வேண்டும் என கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக சமூக வலைத்தளங்களில் செய்தி வெளியானது.


# தேவை

தமிழகத்தில் இயங்கி வரும் பிரபல தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழுக்கு, தமிழகம் முழுவதும் துடிப்பும், ஆர்வமும் மிக்க இளைஞர்கள் செய்திகள் சேகரிக்க மற்றும் புகைப்படம் எடுக்க தேவை.

தொடர்புக்கு:
செல் : 7904806432
போன்: 0452 – 4916699


# கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா? மக்கள் முடிவு செய்வார்கள்- மாணிக்கம் தாகூர்!

சென்னை, பிப். 11–

கூட்டணி ஆட்சியா? அல்லது ஒரு கட்சி ஆட்சியா என்பதை மக்கள் முடிவு செய்வார்கள் என காங்கிரஸ் எம்.பி.மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டிற்கு கூட்டணி ஆட்சி ஒத்துவராது என முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறிய நிலையில் மாணிக்கம் தாகூர் கருத்து தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் கூறப்பட்டுள்ளதாவது:–



மக்கள் முடிவு செய்வார்கள்

.

கூட்டணி ஆட்சியர்?

அல்லது

ஒரு கட்சி ஆட்சியா என்பதை .

2006யில் மக்கள் தீர்பை செயல்படுத்தாதது நம்

தமிழ்நாடு காங்கிரஸ்–ன் தவறு.

இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020